DINATHANTHI

2 OCT 2021

PAGE 9

# புதுவை பல்கலைக்கழகத்தில் நேரடி வகுப்புகள்

## 25-ந்தேதி முதல் தொடங்குகிறது

புதுச்சேரி, அக்.2-
அக்டோபர் 25-ந்தேதி முதல் புதுவை பல்கலைக்கழகத்தில் நேரடி வகுப்புகள் தொடங்கப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### நேரடி வகுப்புகள்

புதுவையில் கொரோனா பாதிப்பு குறைந்ததை தொடர்ந்து பள்ளி, கல்லூரிகள் திறக்கப்பட்டு நேரடி வகுப்புகள் தொடங்கியுள்ளன. அதே நேரத்தில் புதுவை பல்கலைக்கழகத்தில் இன்னும் நேரடி வகுப்புகள் தொடங்கப்படவில்லை.

இதுகுறித்து மாணவர் சங்கங்கள் வலியுறுத்தி வந்தநிலையில் நேரடி வகுப்புகளை தொடங்குவதற்கான அறிவிப்புகளை பல்கலைக்கழகம் தற்போது வெளியிட்டுள்ளது.

### 25-ந்தேதி தொடக்கம்

அதன்படி ஆய்வு மாணவர்களில் அறிவியல் தொழில்நுட்ப மாணவர்களுக்கு வருகிற 25-ந்தேதி வகுப்புகள் தொடங்குகிறது. இறுதியாண்டு பட்டமேற்படிப்பு மாணவர்கள் 3-ம் ஆண்டு மாணவர்கள் (ஒருங்கிணைந்த 5 ஆண்டு படிப்பு) டிசம்பர் 6-ந்தேதியும், சமூக அறிவியல் பிரிவில் இறுதியாண்டு மற்றும் 3-ம் ஆண்டு மாணவர்களுக்கு (ஒருங்கிணைந்த 5 ஆண்டு படிப்பு) ஜனவரி 17-ந்தேதியும் வகுப்புகள் தொடங்குகின்றன.

இதர அனைத்து பட்டமேற்படிப்பு மாணவர்கள், ஆய்வு படிப்பு முதலாம் ஆண்டு மாணவர்கள் ஆகியோருக்கு நேரடி வகுப்பு தொடங்கும் நாட்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

இதற்கான அறிவிப்பை பல்கலைக்கழக பதிவாளர் அமரேஷ் சமந்த்ராயா வெளியிட்டுள்ளார்.

DINA THANTHI

2 OCT 2021

PAGE 9

# பல்கலைக்கழக அதிகாரிகள் மாற்றம்

புதுச்சேரி, அக்.2-

புதுவை பல்கலைக்கழக நூலக அதிகாரியான ராமைய்யா, தேர்வு கட்டுப்பாட்டாளராக மாற்றப்பட்டு உள்ளார். நிதி அதிகாரியான அம்ரேஷ் சமன்ரைய்யா பதிவாளராகவும், தேர்வு கட்டுப்பாட்டாளர் லாசர் நிதி அதிகாரியாகவும், இணை பதிவாளர் சித்ரா சமுதாயக்கல்லூரி முதல்வராகவும், புவிஅறிவியல் துறை பேராசிரியர் பிரமோத் சிங் நூலக தகவல் அதிகாரியாகவும் இடமாற்றம் செய்யப்பட்டு உள்ளனர்.

பேராசிரியர் பாண்டியன் தலைமை லஞ்ச ஒழிப்பு அதிகாரியாகவும், பேராசிரியர் திருநாவுக்கரசு பணியாளர் தேர்வு ஒருங்கிணைப்பாளராகவும், காரைக்கால் வணிகவியல் துறை உதவி பேராசிரியர் அருள்முருகன் காரைக்கால் பிரிவின் ஒருங்கிணைப்பாளராகவும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இதற்கான உத்தரவை புதுவை பல்கலைக்கழக துணை வேந்தர் குர்மீத் சிங் வெளியிட்டுள்ளார்.

DINA MALAR

2 OCT 2021

PAGE 1

# பல்கலைக்கழக உயரதிகாரிகள் இடமாற்றம்

**புதுச்சேரி, அக். 2–**

புதுச்சேரி பல்கலைக் கழகத்தில் பணியாற்றும் உயரதிகாரிகள் 9 பேர் அதிரடியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் துணை வேந்தர் பதவியை தவிர்த்து மற்ற உயர் பதவிகள் அனைத்தும் பொறுப்புகள் அடிப்படையில் கவனிக்கப்பட்டு வருகிறது.

பல்கலையில்., பணியாற்றும் உயரதிகாரிகள் 9 பேர் அதிரடியாக பல்வேறு பிரிவுகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

பல்கலைக்கழக பதிவாளர் சித்ரா, புதுச்சேரி பல்கலைக்கழக சமுதாய கல்லூரி முதல்வராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

நிதி அதிகாரி அமரேஷ் சமந்தர்யா, பல்கலைக்கழக பதிவாளராகவும், பல்கலைக்கழக தேர்வாணையர் லாசர், நிதி அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

நூலகர் ராமய்யா, தேர்வாணையராகவும், நில அறிவியல் துறை பேராசிரியர் பிரமோத் சிங், பல்கலை., நூலகராகவும், இயற்பியல், வேதியியல், பயன்பாட்டு அறிவியல் புல முதன்மையர் பாண்டியன் முதன்மை லஞ்ச ஒழிப்பு அதிகாரியாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பசுமை ஆற்றல் தொழில்நுட்ப புல முதன்மையர் தரணிகரசு, பல்கலைக்கழக கல்வியியல் புல முதன்மையர் செல்லமணி ஆகியோர் பணியாளர் தேர்வு பிரிவு ஒருங்கிணைப்பாளர்களாகவும், காரைக்கால் வணிகவியல் துறை உதவி பேராசிரியர் அருள்முருகன், காரைக்கால் வளாக ஒருங்கிணைப்பாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். இடமாற்றம் செய்யப்பட்ட அதிகாரிகள் உடனடியாக பொறுப்புகளில் விடுவிக்கப்பட்டு, புதிய பணியிடத்தில் சேர உத்தரவிடப்பட்டுள்ளது.

இதற்கான உத்தரவை துணை வேந்தர் குர்மீத் சிங் பிரப்பித்துள்ளார்.

பல்கலைக்கழகத்தில் உயரதிகாரிகளை பொறுத்தவரை ஒன்றிரண்டு அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்படுவது வழக்கம். ஆனால் ஒட்டுமொத்தமாக 9 உயரதிகாரிகள் பல்வேறு பிரிவுகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது இதுவே முதல் முறையாகும்.

DINAMALAR

2 OCT 2021

PAGE 1

# புதுச்சேரி பல்கலைக்கழக நேரடி வகுப்புகள் 25ம் தேதி முதல் படிப்படியாக திறக்க முடிவு

**புதுச்சேரி, அக். 2–**

புதுச்சேரி பல்கலைக் கழக நேரடி வகுப்புகள் வரும் 25ம் தேதி முதல் படிப்படியாக திறக்கப்படும் என, அறிவிக்கப்பட்டுள்ளது.

புதுச்சேரி பல்கலைக் கழகத்தில் 7 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் படிக்கின்றனர். கொரோனா தொற்று காரணமாக கடந்தாண்டு மார்ச் மாதம் முதல் நேரடி வகுப்புகள் நடக்கவில்லை.

ஆன்–லைனில் வகுப்புகள் நடத்தப்படுகிறது. புதுச்சேரி மாநிலத்தில் தொற்று குறைந்துள்ள சூழ்நிலையில் மீண்டும் பல்கலைக்கழக நேரடி வகுப்பினை நடத்த வேண்டும்.

குறிப்பாக ஆராய்ச்சி மாணவர்களுக்கு நடத்த வேண்டும் என, ஒரு மாதமாக பல்வேறு மாணவர் சங்கத்தினர் வலியுறுத்தி வருகின்றனர்.

இந் நி லை யி ல் பல்கலைக் கழக நேரடி வகுப்பினை படிப்படியாக திறக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து, பல்கலைக்கழக பதிவாளர் பிறப்பித்துள்ள உத்தரவு:

புதுச்சேரி பல்கலைக்கழக நேரடி வகுப்புகள் படிப்படியாக மீண்டும் திறக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

முதல்கட்டமாக வரும் 25 ம்தேதி, அறிவியல், இன்ஜினியரிங், தொழில்நுட்ப ஆராய்ச்சி மாணவர்களுக்கும், மாந்தவியல் துறையின் நான்காம், ஐந்தாம் ஆண்டு ஆராய்ச்சி மாணவர்களுக்கும் நேரடி வகுப்புகள் நடத்தப்படும்.

இரண்டாம் கட்டமாக நவம்பர் 15ம் தேதி முதல் மீதமுள்ள பி.எச்.டி., மாணவர்கள் பல்கலைக் கழக நேரடி வகுப்பிற்கு அனுமதிக்கப்படுவர்.

மூன்றாம் கட்டமாக டிசம்பர் 6ம் தேதி முதல் அறிவியல், இன்ஜினியரிங், தொழில்நுட்ப படிப்புகளில் முதுநிலை இறுதியாண்டு மாணவர்களுக்கும், ஐந்தாண்டு ஒருங்கிணைந்த படிப்பில் மூன்றாமாண்டு மாணவர்களுக்கும் நேரடி வகுப்பு நடைபெறும்.

அடுத்தாண்டு ஜனவரி 17ம் தேதி முதல் சமூக அறிவியல், மாந்தவியல் படிப்புகளில் முதுநிலை இறுதியாண்டு மாணவர்களுக்கும், ஐந்தாண்டு ஒருங்கிணைந்த படிப்பில் மூன்றாமாண்டு மாணவர்களுக்கும் நேரடி வகுப்புகள் நடக்கும்.

மு த ல ா ம ா ண் டு ஆராய்ச்சி மாணவர்கள், மீதமுள்ள முதுநிலை மாணவர்களுக்கான நேரடி வகுப்புகள் குறித்த அறிவிப்பு பின்னர் வெளியிடப்படும்.

இவ்வாறு உத்தரவில் கூறப்பட்டுள்ளது.

DINAKARAN

2 OCT 2021

PAGE 6

### புதுவை பல்கலைக்கழகத்தில்

# 9 அதிகாரிகள், பேராசிரியர்கள் இடமாற்றம்

**புதுச்சேரி, அக். 2:** புதுவை பல்கலைக்கழகத்தில் 9 அதிகாரிகள், பேராசிரியர்கள் அதிரடியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

அதன்படி, பல்கலை மத்திய நூலக நூலகர் (பொறுப்பு) ராமையா தேர்வு கட்டுப்பாட்டு அதிகாரியாகவும் (பொறுப்பு), நிதி அதிகாரி (பொறுப்பு) அமரேஷ் சமன்டராயா பதிவாளராகவும், தேர்வு கட்டுப்பாட்டு அதிகாரி (பொறுப்பு) லாசர் நிதி அதிகாரியாகவும் (பொறுப்பு), இணை பதிவாளர் மற்றும் பதிவாளர் (பொறுப்பு) சித்ரா சமுதாயக் கல்லூரி முதல்வராகவும் (பொறுப்பு), புவி அறிவியல் துறை பேராசிரியர் பிரமோத் சிங் நூலகராகவும் (பொறுப்பு), பிசிக்கல், வேதியியல், அப்ளைடு சயின்ஸ் புல முதல்வர் மற்றும் பேராசிரியர் பாண்டியன் தலைமை விஜிலன்ஸ் அதிகாரியாகவும் (பொறுப்பு) மாற்றப்பட்டுள்ளனர்.

அதேபோல், பசுமை சக்தி தொழில்நுட்ப புல முதல்வர் மற்றும் பேராசிரியர் தரணிக்கரசு ஒருங்கிணைப்பாளராகவும் (தேர்வு), கல்வி புல முதல்வர் செல்லமணி ஒருங்கிணைப்பாளராகவும் (தேர்வு), காரைக்கால் வணிகவியல் துறை உதவி பேராசிரியர் அருள்முருகன் காரைக்கால் வளாக ஒருங்கிணைப்பாளராகவும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கான உத்தரவை புதுவை பல்கலைக்கழக துணை வேந்தர் குர்மீத் சிங் நேற்று பிறப்பித்துள்ளார்.

DINAKARAN

2 OCT 2021

PAGE 7

*19 மாதங்களுக்கு பிறகு*

# புதுவை பல்கலைக்கழகம் 15ம் தேதி திறப்பு

புதுச்சேரி, அக். 2: கொரோனா பரவல் காரணமாக கடந்த 2020ம் ஆண்டு மார்ச் இறுதியில் புதுவை பல்கலைக்கழகம் மூடப்பட்டது. அதன் பின்னர், மாணவர்களுக்கு ஆன்லைன் மூலமே வகுப்புகள் நடத்தப்பட்டு வருகிறது. இதற்கிடையே கொரோனா தொற்றின் பாதிப்பு குறைந்து புதுவையில் பள்ளி, கல்லூரிகள் கடந்த செப்.1ம் தேதி முதல் திறக்கப்பட்டது. ஆனால், புதுவை பல்கலைக்கழகம் மட்டும் திறக்கப்படவில்லை. இதனால் பல்கலைக்கழகத்தை திறக்க கோரி மாணவ சங்கத்தினர் போராட்டம் நடத்தினர். இதையடுத்து, சுமார் 19 மாதங்களுக்கு பிறகு புதுவை பல்கலைக்கழகம் வரும் 15ம் தேதி திறக்கப்பட உள்ளது.

இதுதொடர்பாக பல்கலைக்கழக பதிவாளர் (பொறுப்பு) அமரேஷ் சமந்த்தராயா வெளியிட்ட உத்தரவில் கூறியிருப்பதாவது: புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் மாணவர்களை பகுதி, பகுதியாக அனுமதிக்க முடிவு எடுத்துள்ளோம். முதலில் ஆராய்ச்சி மாணவர்களும், அடுத்ததாக பட்டமேற்படிப்பு இறுதியாண்டு படிப்போரும் அனுமதிக்கப்படுவார்கள். வரும் 15ல் அறிவியல், பொறியியல் மற்றும் தொழில்நுட்ப ஆராய்ச்சி மாணவர்களும், மனிதநேயத்துறையில் 4ம் ஆண்டு, 5ம் ஆண்டு மற்றும் ஆராய்ச்சி காலம் நீட்டிக்கப்பட்ட மாணவர்கள் அனுமதிக்கப்படுவார்கள். இதையடுத்து நவம்பர் 15ம் தேதி முதல் பிஎச்டி மாணவர்கள் அனுமதிக்கப்படுவார்கள்.

டிசம்பர் 6ம் தேதி முதல் அறிவியல், பொறியியல் மற்றும் தொழில்நுட்பத்தில் இறுதியாண்டு பட்டமேற்படிப்பு மாணவர்கள், ஐந்தாண்டு ஒருங்கிணைந்த படிப்பு படிப்போரில் 3ம் ஆண்டு மாணவர்கள் அனுமதிக்கப்படுவார்கள். ஜனவரி 17ம் தேதி முதல் சமூக அறிவியல் மற்றும் மனிதநேயத்துறையில் இறுதியாண்டு பட்டமேற்படிப்பு மாணவர்கள், ஐந்தாண்டு ஒருங்கிணைந்த படிப்பில் 3ம் ஆண்டு மாணவர்கள் அனுமதிக்கப்படுவார்கள். இதர பட்டமேற்படிப்பு மாணவர்கள் மற்றும் பிஎச்டி முதலாண்டு மாணவர்கள் அனுமதிக்கும் தேதி பின்னர் அறிவிக்கப்படும். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

DINAMANI

2 OCT 2021

PAGE 5

சனிக்கிழமை, 2 அக்டோபர் 2021

# புதுவை பல்கலைக்கழக பேராசிரியர்கள் பணியிட மாற்றம்

**புதுச்சேரி, அக்.1:** புதுவை பல்கலைக்கழக அதிகாரிகள், பேராசிரியர்கள் வெள்ளிக்கிழமை பணியிட மாற்றம் செய்யப்பட்டனர்.

இதுகுறித்து பல்கலை. துணைவேந்தர் குர்மீத் சிங் வெளியிட்ட உத்தரவு: புதுவைப் பல்கலை. மத்திய நூலகர் (பொ) கே.ராமையா பல்கலை. தேர்வுக் கட்டுப்பாட்டு அதிகாரியாகவும் (பொ), பல்கலை. நிதி அதிகாரி (பொ) அமரேஷ் சமந்தரயா பதிவாளராகவும், தேர்வுக் கட்டுப்பாட்டு அதிகாரி (பொ) டி.லாசர் நிதி அதிகாரியாகவும் (பொ), இணைப் பதிவாளர் மற்றும் பதிவாளர் (பொ) பி.சித்ரா புதுவை சமுதாயக் கல்லூரி முதல்வராகவும் (பொ), பல்கலை. புவி அறிவியல் துறைப் பேராசிரியர் பிரமோத் சிங் நூலகராகவும் (பொ), பல்கலை. இயற்பியல், வேதியியல், அப்ளைடு சயின்ஸ் புல முதல்வர் எஸ்.பாண்டியன் தலைமை விஜிலன்ஸ் அதிகாரியாகவும் (பொ) பணியிட மாற்றம் செய்யப்பட்டனர்.

இதேபோல, பல்கலை. பசுமை சக்தி தொழில்நுட்ப புல முதல்வர் கே.தரணிக்கரசு தேர்வுப் பிரிவு ஒருங்கிணைப்பாளராகவும், பல்கலை. கல்விப் புல முதல்வர் கே.செல்லமணி தேர்வுப் பிரிவு ஒருங்கிணைப்பாளராகவும், காரைக்கால் அரசுக் கல்லூரி வணிகவியல் துறை உதவிப் பேராசிரியர் வி.அருள்முருகன், காரைக்கால் கல்லூரி வளாக ஒருங்கிணைப்பாளராகவும் பணியிட மாற்றம் செய்யப்பட்டனர். இந்தப் பணியிட மாற்ற உத்தரவு அக்டோபர் 1-ஆம் தேதி முதல் நடைமுறைக்கு வருவதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

THE HINDU (TAMIL)

2 OCT 2021

PAGE 3

இந்து தமிழ் திசை

17 மாதங்களுக்குப் பிறகு

# புதுவை மத்திய பல்கலைக்கழகம் 25-ம் தேதி திறப்பு

■ புதுச்சேரி

புதுவை மத்தியப் பல்கலைக் கழகம் வரும் 25-ம் தேதி திறக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கரோனா ஊரடங்கால் கல்விக் கூடங்கள் மூடப்பட்டிருந்த நிலையில், புதுச்சேரி முழுவதும், கல்லூரிகள் கடந்த செப்டம்பர் 1-ம் தேதி முதல் திறக்கப்பட்டு வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. பள்ளிகள் 9 முதல் 12-ம் வகுப்புகள் வரையில் இயங்கி வருகின்றன. வரும் நவம்பர் 1 முதல் 1 முதல் 8-ம் வகுப்பு வரையிலும் இயங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.




கரோனா தொற்று வெகுவாக குறைந்த நிலையிலும், கடந்த 19 மாதங்களாக மூடப்பட்டுள்ள புதுச்சேரி மத்தியப் பல்கலைக் கழகம் திறக்கப்படவில்லை. பல்கலைக்கழகத்தைத் திறக்கக்கோரி மாணவர்கள் போராட்டம் நடத்தினர். இதைத் தொடர்ந்து வரும் 25-ம் தேதி முதல் பகுதி பகுதியாக திறக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாக பல்கலைக் கழகப் பதிவாளர் (பொறுப்பு) டாக்டர் அமரேஷ் சமந்த்தார்யா வெளியிட்டிருக்கும் உத்தரவில்,"புதுச்சேரி மத்தியப்பல்கலைக்கழகத்தில் மாணவர்களை பகுதி, பகுதியாக அனுமதிக்க முடிவு எடுத்துள்ளோம். முதலில் ஆராய்ச்சி மாணவர்களும், அடுத்ததாக பட்டமேற்படிப்பு இறுதி யாண்டுபடிப்போரும் அனுமதிக்கப் படுவார்கள். வரும் அக்டோபர் 25ல் அறிவியல், பொறியியல் தொழில்நுட்ப ஆராய்ச்சி மாணவர்கள், மனிதநேய மற்றும் சமூக அறிவியல் துறை 4 மற்றும் 5-ம் ஆண்டு படிப்போர் மற்றும் ஆராய்ச்சி மாணவர்கள் அனுமதிக்கப்படுவார்கள். அதையடுத்து நவம்பர் 15-ம் தேதி முதல் இதர பிஎச்டி மாணவர்கள் அனுமதிக்கப்படுவார்கள்.

டிசம்பர் 6-ம் தேதி முதல் அறிவியல் மற்றும் பொறியியல் தொழில்நுட்பத்தில் இறுதியாண்டு பட்டமேற்படிப்பு மாணவர்கள், ஐந்தாண்டு ஒருங்கிணைந்த படிப்பு படிப்போரில் 3ம் ஆண்டு மாணவர்கள் அனுமதிக்கப்படுவார்கள். ஜனவரி 17-ம் தேதி முதல் சமூக அறிவியல் மற்றும் மனிதநேயத் துறையில் இறுதியாண்டு பட்ட மேற்படிப்பு மாணவர்கள், ஐந்தாண்டு ஒருங்கிணைந்த படிப்பில் 3-ம் ஆண்டு மாணவர்கள் அனுமதிக்கப்படுவார்கள். இதர பட்டமேற்படிப்பு மாணவர்கள் மற்றும் பிஎச்டி முதலாண்டு மாணவர்கள் அனுமதிக்கும் தேதி பின்னர் அறிவிக்கப்படும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இன்னும் ஏன் இந்த கால இடைவெளி..?

"தமிழகம், புதுச்சேரியில் பள்ளிகளே திறந்து நடந்து வருகிறது. பல்கலைக்கழகத்தில் பட்டமேற்படிப்பு, ஆராய்ச்சி மாணவர்களுக்கு நூலகத்தை பயன்படுத்துவது அவசியமானது. அனைவருக்கும் திறக்காமல் நீண்ட இடைவெளி விட்டு பகுதி, பகுதியாக திறப்பதால், கடும் பாதிப்பு ஏற்படும். வரும் நவம்பர் 1 முதல் 1–ம் வகுப்பு முதல் 8–ம் வகுப்பு வரை திறக்கிறார்கள். 5 வயது இளஞ்சிறார்களை அனுமதிக்கும் நிலையில், எங்களுக்கு வகுப்புகளை பழையபடி நடத்துவதில் ஏன் இந்த இடைவெளி" என்று மாணவர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

THE HINDU (TAMIL)

2 OCT 2021

PAGE 5

# புதுவை பல்கலையில் 9 அதிகாரிகள், பேராசிரியர்கள் இடமாற்றம்

■ புதுச்சேரி

புதுவை பல்கலைக்கழகத்தில் 9 அதிகாரிகள், பேராசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

அதன்படி, பல்கலை மத்திய நூலக நூலகர் (பொறுப்பு) ராமையா தேர்வு கட்டுப்பாட்டு அதிகாரியாகவும் (பொறுப்பு), நிதி அதிகாரி (பொறுப்பு) அமரேஷ் சமன்டராயா பதிவாளராகவும், தேர்வு கட்டுப்பாட்டு அதிகாரி (பொறுப்பு) லாசர் நிதி அதிகாரியாகவும் (பொறுப்பு), இணை பதிவாளர் மற்றும் பதிவாளர் (பொறுப்பு) சித்ரா சமுதாயக் கல்லூரி முதல்வராகவும் (பொறுப்பு), புவி அறிவியல் துறை பேராசிரியர் பிரமோத் சிங் நூலகராகவும் (பொறுப்பு), பிசிக்கல், கெமிக்கல், அப்ளைடு சயின்ஸ் புல முதல்வர் மற்றும் பேராசிரியர் பாண்டியன் தலைமை விஜிலன்ஸ் அதிகாரியாகவும் (பொறுப்பு) மாற்றப்பட்டுள்ளனர்.

அதேபோல், பசுமை சக்தி தொழில்நுட்ப புல முதல்வர் மற்றும் பேராசிரியர் தரணிக்கரசு ஒருங்கிணைப்பாளராகவும் (தேர்வு), கல்வி புல முதல்வர் செல்லமணி ஒருங்கிணைப் பாளராகவும் (தேர்வு), காரைக் கால் வணிகவியல் துறை உதவி பேராசிரியர் அருள்முருகன் காரைக் கால் வளாக ஒருங்கிணைப் பாளராகவும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கான உத்தரவை புதுவை பல்கலைக்கழக துணை வேந்தர் குர்மீத் சிங் நேற்று பிறப்பித்துள்ளார்.

MAALAI MALAR

2 OCT 2021

PAGE 2

### 19 மாதங்களுக்கு பிறகு

# புதுவை பல்கலைக்கழகத்தில் நேரடி வகுப்பு 25-ந் தேதி முதல் திறப்பு

புதுச்சேரி, அக்.2–

புதுவையில் கொரோனா காரணமாக மூடப்பட்டு இருந்த பள்ளி, கல்லூரிகள் கடந்த செப்டம்பர் 1–ந் தேதி முதல் தொடங்கப்பட்டு வகுப்புகள் நடைபெற்று வருகிறது.

ஆனால் கொரோனா காரணமாக கடந்த 19 மாதங்களாக மூடப்பட்டுள்ள புதுவை மத்திய பல்கலைக்கழகம் திறக்கப்படவில்லை. இதனால் பல்கலைக் கழகத்தை திறக்க வலியுறுத்தி மாணவர்கள் போராட்டம் நடத்தினர்.

இந்த நிலையில் பல்கலைக் கழகப் பதிவாளர் பொறுப்பு வகிக்கும் டாக்டர் அமரேஷ் சமந்த்தார்யா வெளி யிட்டுள்ள உத்தரவில் கூறி யிருப்பதாவது:–

புதுவை பல்கலைக் கழகத்தில் மாணவர்களை பகுதி, பகுதியாக அனுமதிக்க முடிவு எடுத்துள்ளோம். முதலில் ஆராய்ச்சி மாணவர்களும், அடுத்ததாக பட்டமேற்படிப்பு இறுதி யாண்டு மாணவர்களும் அனுமதிக்கப்படுவார்கள்.

வருகிற அக்டோபர் 25–ந் தேதி அறிவியல், பொறியியல் தொழில் நுட்ப ஆராய்ச்சி மாணவர்களும், மனிதநேய மற்றும் சமூக அறிவியல் துறை 4 மற்றும் 5–ம் ஆண்டு படிப்போர் மற்றும் ஆராய்ச்சி மாணவர்கள் அனுமதிக்கப்படுவார்கள்.

#### இறுதியாண்டு மாணவர்கள்

அதையடுத்து நவம்பர் 15–ந் தேதி முதல் இதர பி.எச்.டி. மாணவர்கள் அனுமதிக்கப்படுவார்கள். டிசம்பர் 6–ந் தேதி முதல் அறிவியல் மற்றும் பொறியியல் தொழில் நுட்பத்தில் இறுதியாண்டு பட்டமேற்படிப்பு மாணவர் கள், 5 ஆண்டு ஒருங்கிணைந்த படிப்பு படிப்போரில் 3–ம் ஆண்டு மாணவர்கள் அனுமதிக்கப்படுவார்கள்.

ஜனவரி 17–ந் தேதி முதல் சமூக அறிவியல் மற்றும் மனித நேயத்துறையில் இறுதியாண்டு பட்ட மேற்படிப்பு மாணவர்கள், 5 ஆண்டு ஒருங்கிணைந்த படிப்பில் 3–ம் ஆண்டு மாணவர்கள் அனுமதிக்கப் படுவார்கள். இதர பட்ட மேற்படிப்பு மாணவர்கள் மற்றும் பி.எச்.டி முதலாண்டு மாணவர்கள் அனுமதிக்கும் தேதி பின்னர் அறிவிக்கப்படும்

இவ்வாறு அவர் அந்த உத்தரவில் கூறியுள்ளார்.

MAALAI MALAR

2 OCT 2021

PAGE 3

### புதுவை பல்கலைக்கழக

# அதிகாரிகள், பேராசிரியர்கள் இடமாற்றம்

புதுச்சேரி, அக்.2–

புதுவை பல்கலைக் கழகத்தில் 9 அதிகாரிகள், பேராசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

**மாற்றம்**

அதன்படி, பல்கலை மத்திய நூலக நூலகர் (பொறுப்பு) ராமையா தேர்வு கட்டுப்பாட்டு அதிகாரி யாகவும் (பொறுப்பு), நிதி அதிகாரி (பொறுப்பு) அமரேஷ் சமன்டராயா பதிவாளராகவும், தேர்வு கட்டுப்பாட்டு அதிகாரி (பொறுப்பு) லாசர் நிதி அதிகாரியாகவும் (பொறுப்பு), இணை பதிவாளர் மற்றும் பதிவாளர் (பொறுப்பு) சித்ரா சமுதாயக் கல்லூரி முதல்வராகவும் (பொறுப்பு), புவி அறிவியல் துறை பேராசிரியர் பிரமோத் சிங் நூலகராகவும் (பொறுப்பு), பிசிக்கல், வேதியியல், அப்ளைடு சயின்ஸ் புல முதல்வர் மற்றும் பேராசிரியர் பாண்டியன் தலைமை விஜிலன்ஸ் அதிகாரியாகவும் (பொறுப்பு) மாற்றப்பட்டுள்ளனர்.

**நியமனம்**

அதேபோல், பசுமை சக்தி தொழில் நுட்ப புல முதல்வர் மற்றும் பேராசிரியர் தரணிக்கரசு ஒருங்கிணைப்பாளராகவும் (தேர்வு), கல்வி புல முதல்வர் செல்லமணி ஒருங்கிணைப்பாளராகவும் (தேர்வு), காரைக்கால் வணிகவியல் துறை உதவி பேராசிரியர் அருள்முருகன் காரைக்கால் வளாக ஒருங்கிணைப்பாளராகவும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இதற்கான உத்தரவை புதுவை பல்கலைக்கழக துணை வேந்தர் குர்மீத் சிங் பிறப்பித்துள்ளார்.

THE HINDU

2 OCT 2021

PAGE 2

# Varsity plans to permit students on campus from October 25

## Detailed guidelines to be notified shortly

SPECIAL CORRESPONDENT
PUDUCHERRY

Pondicherry University is planning to permit the students into the campus in a phased manner, beginning with research scholars from October 25.

In subsequent phases, final year PG students/students opting for exit option and then the other students would be allowed into the campus, the Pondicherry University said.

In this regard detailed guidelines / SOPs will be notified shortly.

Under a tentative schedule for permitting students on the campus, research scholars (Science, Engineering & Technology; Humanities 4th year, 5th year and research period-extended scholars would be allowed from October 25, Ph.D scholars from November 15, science, engineering, technology stream final year PG students and 3rd year PG (5 year integrated programme) from December 6 and social sciences and humanities stream from January 17.

Re-entry of all other PG students and first year Ph.D. scholars admitted in 2021-22 would be decided later, the University said.

THE HINDU

2 OCT 2021

PAGE 2

# Reshuffle of top officials

SPECIAL CORRESPONDENT
PUDUCHERRY

In a reshuffle of top officers, Pondicherry University has appointed C. K. Ramaiah, librarian (in-charge) as Controller of Examinations (in-charge) in the place of the incumbent D. Lazer who has been posted as Finance Officer (in-charge).

Amaresh Samantaraya is the new Registrar (in-charge).

B. Chitra, Joint Registrar and Registrar (in-charge) has been appointed Principal (in-charge), Community College. G. Chandrasekaran, incumbent, shall work as adviser till October 31, or until further orders, the University circular said.

In other changes, Pramod Singh is Librarian (in-charge), M.S. Pandian, Chief Vigilance Officer (in-charge), K. Tharanikarasu and K. Chellamani, Coordinators (Recruitment) and V. Arulmurugan, Coordinator (Karaikal campus).